IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | கௌதமன் |
| FATHER'S NAME | - | சின்னசாமி |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.03.2024.

All Accsued Present

நான் வேலூர் மக்கான் சீனிவாச நகரில் இருக்கிறேன். நான் வேலூர் பாலாற்றில் சுடுகாட்டு வாட்ச்மேனாக இருந்தேன். தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 2021 வருடம் ஜீன் மாதம் பணி ஓய்வு பெற்று விட்டேன்.கடந்த 11.01.2021 தேதியில் காலை சுமார் 7.30 மணிக்கு சுடகாட்டில் சுற்று பார்த்து கொண்டு இருந்த போது எரிமேடை பக்கத்தில் துர்நாற்றம் வீசியது அதனால் நான் அருகில் சென்று பார்த்த போது கால் விரல் மட்டும் வெளியே தெரியும் படி இருந்தது. அதன் பின்னர் கிராம நிர்வாக அலுவலருக்கும், காவல் நிலையத்திற்கும் நான் நேரில் சென்று சொன்னேன். அதன் பிறகு மணியக்காரரும், போலீசாரும் வந்து அந்த

இடத்தை பார்த்து விட்டு தோண்டி பார்த்த போது ஒரு மனித உடல் சிவப்பு கலர் சட்டையுடன் நீலகலர் லுங்கியுடன் **இருந்தது. அந்த உடலில் இடது மார்பு, வயிறு, வலது உள்ளங்ககை இல்லாமலும் இருந்தது வலது கால்பாதம் மற்றும் விரல்கள் இல்லாமலும் இருந்தது. இறந்த நபரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர்கள் அப்போது அங்கு வந்தார்கள் இறந்த நபர் என்னுடைய கணவர், தந்தை என்று சொன்னார்கள். அதன் பிறகு மருத்துவர்கள் அந்த இடத்திற்கு வந்து அங்கேயே பிரேத பரிசோதனை மேற்கொண்டார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சுடகாட்டில் என்னுடைய பணி நேரம் எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை என்றால் காலை 6 மணியில் இருந்து மதியம் 11 மணி வரை அதன் பிறகு 2 மணியில் இருந்து மாலை 6 மணி வரை. பொதுவாக 10 நபர்கள் சுடுகாட்டிற்குள் வர வேண்டும் என்றால் எனக்கு தெரியாமல் வர இயலாது என்றால் சரியல்ல, சுடுகாட்டை சுற்றி நான்கு புறமும் சுற்று சுவர் இல்லாததாலும் பேருந்து நிலையம் அருகில் இருப்பதாலும் யார் வருகிறார்கள் போகிறார்கள் என்று என்னால் கவனிக்க இயலாது. காவல் நிலையத்தில் நான் புகார் ஏதும கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக புகார் கொடுத்தேன். போலீசாரும் என்னுடைன் வந்தாகளா என்றால் ஆமாம். காலை 6.30 மணிக்கே நான் காவல் நிலையத்தில் சொல்லி விட்டேனா என்றால் ஆமாம். உடனே போலீசார் சம்பவ இடம் வந்தார்களா என்றால் ஆமாம். போலீசார் வந்த பிறகு தான் மணியக்கார் தாசில்தாரர் ஆகியோர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். சவத்தின் அருகில் இரு சக்கர வாகனம் எதுவும் இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. சடலம் இருந்த இடத்திற்கும் எரிமேடை உள்ள இடத்திற்கும் இடையே எவ்வளவு துாரம்

இருக்கும் என்றால் சுமார் 15 தூரம் இருக்கும். சடலத்தை தோண்டி எடுக்கும்போது பொது மக்கள் எவ்வளவு நபர்கள் இருந்தாகள் என்றால் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள். இறந்த நபரின் மனைவிக்கு போலீசார் தகவல் சொல்லி வர சொன்னதன் பேரில் தான் அவர் அங்கு வந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இறந்த போன நபரின் உறவினர்கள் எத்தனை பேர்கள் வந்தார்கள் என்றால் யார் யார் உறவினர்கள் என்று எனக்கு தெரியாது. நான் உயர்அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கிணங்க போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY